**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**

**CASE NO.SC. 180/2023**

**Deposition of P.W.1**

Name : திரு. ஜஸ்டின்ராஜ்

S/o, D/o, W/o : செல்லையன்

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

Dated:18.06.2025

**Accused Present.**

<u>முதல் விசாரணை</u>–

நான் தற்போது குலசேகரம் காவல்நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். சம்பவ காலத்தில் புதுக்கடை காவல்நிலையத்தில் தலைமைக்காவலராக பணியாற்றி வந்தேன். ஆஜர் எதிரியை தெரியும். ஆஜர் எதிரியின் பெயர் சுரேஷ். ஆஜர் எதிரி மீது தக்கலை காவல்நிலையத்தில் பல்வேறு வழக்குகள் நிலுவையில் இருந்தது. அதற்காக அவரை போலீசார் கைது செய்து சென்றனர். நான் தான் அவரை கைது செய்ய காரணம் என்று நினைத்து என்னை பார்க்கும் போது எல்லாம் அசிங்கமான வார்த்தைகளால் பேசுவார். 28.02.2023ம் தேதி காலை 08.00 மணிக்கு அலுவல் நிமித்தமாக சென்று கொண்டிருந்தபோது எனக்கு சொந்தமான TN 75 M 0904 என்ற பதிவு எண் கொண்ட இருசக்ர வாகனத்தில் நல்லவிளை அஜின் என்பவர்வீட்டின் முன்பாக சென்று கொண்டிருந்த போது என்னை கொலை செய்ய வேண்டுமென்ற

நோக்த்ததில் TN 72 AP 554 என்ற யமஹா வாகனத்தால் எனது வாகனத்தின் மீது இடித்து இதோடு செத்து தொலைந்து போ என்று இடித்தார் நான் நிலை தடுமாறி மின்கம்பத்தின் அருகே விழுந்தேன். உடனே எதிரி அவரது வாகன்ததில் இருந்த கேரியரை பிடுங்கி எனது தலையில் செத்து தொலைந்து போ என்று சொல்லி அடித்தார். நான் விலகி கொள்ள அந்தஅடியானது எனது வலது கன்னத்தில் பட்டு ரத்தக்காயம் ஏற்பட்டது. மீண்டும் எதிரி என்னை காலால் மார்பில் மிதித்து கீழே தள்ளியதில் எனது இடது கணுக்காலிலும், வலது முட்டிலும் சிராய்ப்பு காயங்கள் ஏற்பட்டது. சம்பவத்தை பார்த்த வசந்தன் மனைவி பேபி, செல்லன் மகன் சகாயம் ஓடி வரவே எதிரி சுரேஷ் என்னை பார்த்து இன்று தப்பி விட்டாய் என்றாவது ஒரு நாள் உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று கொலை மிரட்டல் விடுத்தார். தக்கலை அரசு மருத்துவமனைக்கு என் மனைவி என்னை சிகிச்கைக்காக ஆட்டோவில் அழைத்து வந்தார். தக்கலை காவல்நிலையத்தில் வைத்து திருவட்டார் காவல்நிலைய உதவி ஆய்வாளரிடம் புகார் மனு கொடுத்தேன். அந்த புகார்மனுவில் எனது இருசக்கர வாகன எண்ணை பதற்றத்தில் 0940 என்று சொல்லி விட்டேன், ஆனால் எனது இருசக்கர வாகன எண் 0904 ஆகும். அந்த புகார் மனு அ.சா.ஆ.1. காவல்ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

எதிரிதரப்பிற்கு வாய்ப்பு வழங்கப்பட்டது. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை. சாட்சி குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**

**CASE NO.SC. 180 /2023**

**Deposition of P.W.2**

Name : திரு. சகாயம்

S/o, D/o, W/o : செல்லன்

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

Dated:18.06.2025

**Accused Present.**

முதல் விசாரணை–

நான் தற்போது ஆலக்காவிளையில் வசித்து வருகிறேன். கூலி வேலை பார்க்கிறேன். அ.சா.1ஐ தெரியும். ஆஜர் எதிரியையும் தெரியும். அ.சா.1–ற்கும், எதிரிக்கும் இடையே என்ன முன்விரோதம் என்று எனக்குத் தெரியாது. ஆனால் பிரச்சனை நடந்தது தெரியும். 28.02.2023ம் தேதி காலை 08.00 மணிக்கு நல்லவிளையில் அஜின் வீட்டின் அருகே வைத்து அ.சா.1 வேலை சம்மந்தமாக இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்தார். எதிரி அவர் வந்து கொண்டிருந்த இருசக்கர வாகனத்தால் அ.சா.1 வந்து கொண்டிருந்த வாகனத்தை இடித்து தள்ளி விட்டார். எதிரி இருசக்கர வாகனத்தில் இருந்தகேரியரை எடுத்து அ.சா.1ன் தலையை நோக்கி ஓங்கி அடித்தார். அ.சா.1 சற்று பின் வாங்கியதால் அந்த அடி வலது பக்க கன்னத்தில் பட்டது. மீண்டும் எதிரி அ.சா.1ஐ நெஞ்சில் மிதித்தார். அ.சா.1 கீழே விழுந்ததில் வலது பக்க காலில் காயம் ஏற்பட்டது.

அ.சா.1ஐ அவரது மனைவி மருத்துவமனைக்கு அழைத்து சென்றார். இந்த வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

எதிரிதரப்பிற்கு வாய்ப்பு வழங்கப்பட்டது. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை. சாட்சி குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.